# ஆற்காடு நகராட்சி

மன்றக் கூட்டப் பொருள்

**31 .12 .2021-ம் தேதி பிற்பகல் 03.00 மணிக்கு நடைபெறவுள்ள நகரமன்ற சாதாரணக்கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்.**

**பொருள் எண்.01)** இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் நவம்பர் 2021 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு.:- 1) மன்றம் பதிவுசெய்யலாம்.

ந.க.எண்.0665/2018/சி1

**தீர்மான எண். 216,** பதிவு செய்யப்பட்டது

**பொருள் எண்.02)** இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் நவம்பர் -2021 நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் பதிவுசெய்யலாம்

**தீர்மான எண். 217,** பதிவு செய்யப்பட்டது

**பொருள் எண்.03)** இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் பயன்பாட்டில் உள்ள TN73AC6459 என்ற TATA LCV இலகு ரக வாகனத்தில் மின்கலன் பழுது ஏற்றப்பட்டதால், இதனை சரிசெய்ய 09.11.2021 மற்றும் 01.12.2021 ஆம் நாளில் மறுவிலைப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டதில் 08.12.2021 ஆம் நாளில் கீழ்கண்ட விநியோகஸ்தர்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விநியோகஸ்தர்கள் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | Babu Battery Centre, Arcot | 3000.00 |
| 2 | Jayakumar battery Centre, Banavaram | 3300.00 |
| 3 | Sri Samundiswari Battery works, Arni | 3600.00 |

அ.கு:- 1) மன்றம் அனுமதி வழங்கலாம்

2) TN73AC6459 என்ற TATA LCV இலகு ரக வாகனத்தில் மின்கலன் பழுது விலைப்புள்ளி கோரப்பட்டதில் வ.எண்.01. பாபு பேட்டரி சென்டர், ஆற்காடு என்பவரின் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று விநியோக உத்தரவு வழங்கவும் மற்றும் செலவினத் தொகைக்கு மன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்

3) புதிய மின்கலன் வாங்க 08.11.2021ல் தோராயச் செலவினத் தொகை ரூ.10000/- வருவாய் நிதியில் மேற்கொள்ள அனுமதி பெறப்பட்டுள்ளது.
**தீர்மான எண். 218,** அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.04)** இந்நகராட்சியின் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் பயன்பாட்டில் உள்ள TN73AC6529, TN73AC6482, TN73AC3454, TN73AC3449, TN73AC6459, மற்றும் TN73AC3423 ஆகிய வாகனங்களில் உள்ள டயர்கள் மற்றும் டியூப்கள் பழுதானதால் இதனை புதிய டயர்கள் மற்றும் டியூப்கள் மாற்ற வேண்டி 09.11.2021ஆம் நாளில் தோராயச் செலவினத் தொகை ரூ.45000/-க்கு மன்ற அனுமதி பெற்று 10.11.2021ஆம் நாளில் விலைப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டதில் 30.11.2021இல் கீழ்கண்ட விலைப்புள்ளிகள் வரப்பெற்றமைக்கு ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது-

| வ.எண் | விநியோகஸ்தர்கள் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | Shree Vari Tyres, Arcot | 36000.00 |
| 2 | Rekha Vari Tyres, Arcot | 37200.00 |
| 3 | Girish Tyres, Arcot | 38400.00 |

அ.கு:- 1) மன்றம் அனுமதி வழங்கலாம்
2) TATA LCV வாகனங்கள் TN73AC6529, TN73AC6482 , TN73AC3454, TN73AC3449, TN73AC6459, மற்றும் TN73AC3423 ஆகியவற்றில் டயர்கள் மற்றும் டியூப்கள் புதியதாக மாற்ற விலைப்புள்ளி கோரப்பட்டதில் வ.எண்.1) Shree Vari Tyres, Arcot என்பவரின் குறைவான விலைப்புள்ளியை ஏற்று விநியோக உத்தரவு வழங்க மன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்
3) புதிய டயர்கள் மற்றும் டியூப்கள் மாற்ற செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் 09.11.2021 ஆம் நாளில் மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது.
ந.க.எண்.1722/2021/எச்1
**தீர்மான எண். 219,** அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.05)** இந்நகராட்சியில் பொதுசுகாதாரப் பிரிவில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்கள் பொது சுகாதாரப் பணியில் ஈடுபடும்போது பணியாளர்களுக்க கொரோனா வைரஸ்தொற்று நோயினை தடுக்கும் பொருட்டு கையுறைகள் மற்றும் முகவுறைகள் வாங்க 10.11.2021ஆம் நாளில் விலைப்புள்ளிகள் கோரப்பட்டது. இதற்கான செலவினத் தொகை ரூ.1.50 இலட்சத்திற்கு 08.11.2021இல் தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது- எனவே,

03.12.2021ஆம் நாளில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளமைக்கு ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| Sl.No | Description | Unit | Vignesh Traders | Green World Arcot | Matha Enterprises, Ranipet |
|---|---|---|---|---|---|
| 1 | 3 Play Nose Mask | 1 Nos | 3.50 | 4.25 | 4.00 |
| 2 | Pu Coate Gloves | 1 Nos | 100 | 115.00 | 110.00 |
| 3 | Nitrile Green Gloves | 1 Nos | 150.00 | 165.00 | 160.00 |

அ.கு:- 1) மன்றம் அனுமதி வழங்கலாம்

2) இந்நகராட்சியில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களுக்கு பொதுசுகாதாரப் பணியில் ஈடுபடும்போது கொரோனா வைரஸ் தொற்று நோய் பாதிப்பு ஏற்படாவண்ணம் முகவுறை மற்றும் கையுறைகளை வாங்க விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வ.எண்.1 Vignesh Traders என்பவரின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதினால் மேற்படி நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்க மன்ற முன் அனுமதியினை தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்கள் ஒப்புதல் அளித்தமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

3) கொள்முதல் செய்வதற்கான செலவினத் தொகையினை SDRF Fund-ல் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.556/2020/எச்1

**தீர்மான எண். 220,** அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.06** இந்நகராட்சியில் மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகமும், அகில இந்திய தொழில்நுட்ப கல்வி இயக்கமும் இணைந்து நகராட்சிகளிலும், சீர்மிகு நகரங்களில் இளம் பட்டதாரிகளின் வேலை தரத்தினை உயர்த்துவதற்காக The Urban Learning Internship Porgramme (TULIP) என்ற திட்டத்தினை செயல்படுத்த தினதந்தி நாளிதழில் 03.09.2020 அன்று பக்கம் எண்.4ல் விளம்பரம் செய்யப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.3124/- வழங்க மன்றத்தின் அனுமதிக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு:- Bright Advertising என்ற நிறுவனத்திற்கு பட்டியல் தொகை ரூ.3124/- வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 221,** அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.07** இந்நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் பயன்பாட்டில் உள்ள இலகுரக வாகனம் TN73AC 3449 என்ற டாடா ஏஸ் வாகனத்தில் மின்கலன் பழுதடைந்துள்ளதால் புதிய மின்கலன் வாங்கி தருமாறு ஒட்டுநர் திரு.ஜெ.இராஜா என்பவர் கோரியுள்ளதற்கு, உள்ளூர் மின்கலன் விநியோகஸ்தர்களிடமிருந்து விலைப்புள்ளிகள் பெற்று புதிய

மின்கலனை மேற்படி வாகனத்தில் பொறுத்தவும், இதற்கான தோராயச் செலவினத் தொகை ரூ.10000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது-

அ.கு:- 1) மன்றம் அனுமதி வழங்கலாம்

2) திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் பயன்பாட்டில் உள்ள TN3AC 3449 என்ற டாடா ஏஸ் வாகனத்தில் மின்கலன் பழுதடைந்துள்ளதால் புதிய மின்கலனை விலைப்புள்ளிகள் பெற்று பொறுத்த தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் பெற்றமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்

3) மின்கலனுக்குண்டான செலவினத் தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.2106/2021/எச்1

**தீர்மான எண். 222,** அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.08** இந்நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் பயன்பாட்டில் உள்ள மூன்று சக்கர ஆட்டோ வாகனம் TN73E0139 என்ற வாகனத்தில் மின்கலன் மற்றும் செல்ப் மோட்டார் பழுதடைந்துள்ளதால் புதிய மின்கலன் மற்றும் செல்ப் மோட்டார் பழுதுகளை நிவர்த்தி செய்துதருமாறு ஒட்டுநர் திரு.கே.இராஜன் என்பவர் கோரியுள்ளதற்கு. உள்ளூர் மூன்று சக்கர வாகன பழுது நீக்குபவர்களிடமிருந்து விலைப்புள்ளிகள் பெற்று நடவடிக்கை மேற்கொள்ள தோராயச் செலவினத் தொகை ரூ.15000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது-

அ.கு:- 1) மன்றம் அனுமதி வழங்கலாம்

2) திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் பயன்பாட்டில் உள்ள TN73E 0139 என்ற மூன்று சக்கர ஆட்டோவில் மின்கலன் மற்றும் செல்ப் மோட்டார் பழுதடைந்துள்ளதால் புதிய மின்கலன் மற்றும் செல்ப் மோட்டார் பழுதுகளை நிவர்த்தி செய்ய விலைப்புள்ளிகள் பெற்று நடவடிக்கைகள் மேற்கொள்ள தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் பெற்றமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்

3) வாகன பழுதிற்கான செலவினத் தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1979/2021/எச்1

**தீர்மான எண். 223,** அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.09** ஆற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட இடத்தில் வார்டு பி, பிளாக் எண்.9, T.S.No.68/1 650 ச.மீ பரப்பளவு நில உபயோக மாற்றம் செய்து விளமபரம் செய்ய திரு.டி.பாஸ்கர், ஆற்காடு என்பவர் விண்ணப்பித்துள்ளார்.

நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.7041/2021/TCP-8 நாள்.30.07.2021 மனுதாரரின் நில உபயோக மாற்றத்திற்கான உத்தேசத்தினை அனுப்ப மட்டுமே உள்ளூர் திட்ட குழுமம் தீர்மான எண்.24, நாள்.23.11.2017ல் தீர்மானிக்கப்பட்டுள்ளது. நில உபயோக மாற்றம் குறித்து தினசரி நாளிதழில் தமிழ் நாளிதழ், தினமணி இதழில் நாள்.25.11.2021, ஆங்கி நாளிதழ் டைம்ஸ் ஆப் இந்தியா இதழில் நாள்.25.11.2021 விளம்பரம் செய்யப்பட்டது. விளம்பர கட்டணம் ரூ.33,264/- தொகையினை வழங்க விளம்பரம் செய்யப்பட்ட Bright Advertising விளம்பர நிறுவனம் 09.12.2021 அன்று பில் தொகைக்கான விளம்பர கட்டண ரசீதுயினை வழங்கியுள்ளார். விளம்பரக்கட்டணத்தை வழங்க மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அ.கு. அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.1886/2017/எப்1

**தீர்மான எண். 224,** அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.10** இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் பயன்பாட்டில் உள்ள TN73AC 3454 என்ற இலகுரக வாகனம் வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கி வாகன தகுதி சான்று பெற வேண்டியுள்ளதால், இந்த வாகனத்தினை அங்கீகரிக்கப்பட்ட LAWRENCE AUTOMOTIVE PRIVATE LIMITED, VELLORE நிறுவனத்தில் மேற்கொள்ள இதற்கான தோராயச் செலவினத் தொகை ரூ.43000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் அனுமதி வழங்கலாம்

2) LAWRENCE AUTOMOTIVE PRIVATE LIMITED, VELLORE நிறுவனத்தில் பழுதுகளை நிவர்த்தி செய்து TN73AC 3454 என்ற இலகுரக வாகனம் வாகனத்தை தகுதி சான்று பெற மன்றப்பொருள் எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் அளித்தமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

3) வாகன பழுதிற்கான செலவினத் தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1720/2021/எச்1

**தீர்மான எண். 225,** அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.11** இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் பயன்பாட்டில் உள்ள TN73AC 3449 என்ற இலகுரக வாகனம் வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கி வாகன தகுதி சான்று பெற வேண்டியுள்ளதால், இந்த வாகனத்தினை அங்கீகரிக்கப்பட்ட LAWRENCE AUTOMOTIVE PRIVATE LIMITED, VELLORE நிறுவனத்தில் மேற்கொள்ள இதற்கான தோராயச் செலவினத் தொகை ரூ.41000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் அனுமதி வழங்கலாம்

2) LAWRENCE AUTOMOTIVE PRIVATE LIMITED, VELLORE நிறுவனத்தில் பழுதுகளை நிவர்த்தி செய்து TN73AC 3449 என்ற இலகுரக வாகனம் வாகனத்தை தகுதி சான்று பெற மன்றப்பொருள் எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் அளித்தமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

3) வாகன பழுதிற்கான செலவினத் தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1721/2021/எச்1

**தீர்மான எண். 226,** அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.12** இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் பயன்பாட்டில் உள்ள TN73AC 3423 என்ற இலகுரக வாகனம் வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கி வாகன தகுதி சான்று பெற வேண்டியுள்ளதால், இந்த வாகனத்தினை அங்கீகரிக்கப்பட்ட LAWRENCE AUTOMOTIVE PRIVATE LIMITED, VELLORE நிறுவனத்தில் மேற்கொள்ள இதற்கான தோராயச் செலவினத் தொகை ரூ.45000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் அனுமதி வழங்கலாம்

2) TATA LAWRENCE AUTOMOTIVE PRIVATE LIMITED, VELLORE நிறுவனத்தில் பழுதுகளை நிவர்த்தி செய்து TN73AC 3449 என்ற இலகுரக வாகனம் வாகனத்தை தகுதி சான்று பெற மன்றப்பொருள் எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் அளித்தமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

3) வாகன பழுதிற்கான செலவினத் தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1700/2021/எச்1

**தீர்மான எண். 227,** அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.13** ஆற்காடு நகராட்சிக்கு சொந்தமான ஏழுகடை வரிசையில் உள்ள குத்தகை கடை எண்.5க்கு குத்தகை கடைக்கு குத்தகைதாரரர் திரு.ஷபீர் அகமது இக்குத்தகை கடையினை ஏற்று நடத்திவந்த காலத்தில் இக்குத்தகை கடைக்கு கடை எண்.5க்கு ரூ.20000/– மற்றும் ரூ.9520/–ஆகமொத்தம் ரூ.29520/–ஐ முன்வைப்புத் தொகையாக செலுத்தியுள்ளார். இத்தொகை இத்தொகை நாளது தேதிவரை நிலுவை முனவைப்பு பதிவேட்டில் முன்கொனரப்படவில்லை. மேலும் இவ்வைப்புத் தொகைகள் யாவும் காலங்கடந்த வைப்புத் தொகையாக இருப்பதாலும் முன்வைப்புத் தொகை திரும்ப வழங்காததாலும் இக்கடை வாடகை வைப்புத் தொகையை திரும்ப வழங்க மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அ.கு:– 1)** குத்தகைதாரரான திரு.ஷபீர்அகமது என்பவர் **2002–03**ம் நிதியாண்டில் குத்தகை கடைக்கு வைப்புத் தொகையாக ரூ.**29520/–**ஐ செலுத்தினார். இக்குத்தகை வைப்புத் தொகை காலாவதியாகி விட்டதால் மன்றத்தின் ஒப்புதல் எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதிபெற்று திரு.ஷபீர்அகமது என்பவருக்கு ரூ.**29520/–**ஐ திரும்ப வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.414/2021/அ1

**தீர்மான எண். 228,** அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.14** இந்நகராட்சியின் பொதுசுகாதாரப் பிரிவில் டெங்கு கொசு ஒழிப்பு பணிக்கு நான்கு மகளீர் குழு 52 பணியாளர்களை கொண்டு தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதில் 31.12.2021ஆம் நாளுடன் மன்ற அனுமதி முடிவடைகிறது. இப்பணியினை மேலும் ஆறு மாதங்களுக்கு 01.01.2022 முதல் 30.06.2022ஆம் நாள் வரை மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட 2019-2020ஆம் வருடத்திய தினக்கூலி வ.எண்.24 ரூ.277/-ன் அடிப்படையில் பணியினை நீடித்தி ஊதிய த் தொகையினை வழஙக தோராயச் செலவினத் தொகை ரூ.27.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் அனுமதி வழங்கலாம்

2) இந்நகராத்தின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு கொசு ஒழிப்பு பணியினை தொடர் நடவடிக்கையாக மேற்கொண்டு வருவதால் நிர்ணயம் செய்யப்பட்ட அதே தினக்கூலியின் அடிப்படையில் மேலும் ஆறு மாதங்களுக்கு நீடித்து 52 மகளீர் குழு பணியாளர்களின் மாத ஊதியம் வழங்க மன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

3) டெங்கு கொசு ஒழிப்பு பணியில் ஈடுபடும பணியாளர்களுக்குண்டான தினக்கூலியினை மாத ஊதியத் தொகையாக வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.2600/2015/எச்1

**தீர்மான எண். 229,** அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.15** இந்நகராட்சியின் பொதுசுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் மூன்றூ நூண்ணுர மைங்களில் குப்பைகளை தரம் பிரித்து எருவாக்கும் பணிக்கு ஆண்கள் சுய உதவிக்குழுவின் 15 பணியாளர்களை கொண்டு பணியில் ஈடுபடுத்தியதில் 31.12.2021ஆம் நாளுடன் மன்ற அனுமதி முடிவடைவதால், 01.01.2022 நாள் முதல் 31.03.2022 வரை மேலும் மூன்று மாதங்களுக்கு 2019-2020 வருடத்திய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தினக்கூலி நிர்ணயம் செய்யப்பட்ட (S.No.1. Unskilled labour – 320) அடிப்படையில்

மூன்று மாதங்களுக்கு தோராயச் செலவினத் தொகை ரூ.4.35 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் அனுமதி வழங்கலாம்

2) திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் மூன்று நூண்ணுர மையத்தில் குப்பைகளை உரமாக்கும் திட்டப் பணிக்கு தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு ஆண்கள் சுய உதவிக்குழுவின் 15 பணியாளர்களை கொண்டு மேற்கொள்ள மன்ற பொருள் எதிர்நோக்கி தனி அலுவலர் (ம) ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் அளித்தமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

3) 15 சுய உதவிக்குழுவின் பணியாளர்களுக்கு மாத ஊதியத்ய தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழஙகலாம்

ந.க.எண்.589/2020/எச்1

**தீர்மான எண். 230,** அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.16** ஆற்காடு நகராட்சி நகர்ப்புற உள்ளாட்சித்தேர்தல் – 2021 நடைபெறுவரையொட்டி நகராட்சியில் நடைபெறும் தேர்தல் செலவினம் தோராய மதிப்பீடு தொகை ரூ.60.00 இலட்சம் செலவினம் பொதுநிதியிலிருந்து செலவிட மன்ற பார்வைக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அ.கு. அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.951/2021/எப்1

**தீர்மான எண். 231,** அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.17** ஆற்காடு நகராட்சி State Level Monitoring Committee of National Green Tribunal for Solid waste Management in TamilNadu

The Hon'ble Justice Dr.P.Joythimani, Chairperson State Level Monitoring Committee அவர்கள் 29.12.2022 அன்று ஆற்காடு நகராட்சி பகுதியில் வருகை புந்து நகராட்சி இடங்களை ஆய்வுமேற்கொண்டார். அவர்கள் வருகைபுரிந்தவர்க்க வரவேற்பு வழங்கிட பந்தல் மற்றும் பேனா (வரவேற்பு) மூன்று இடங்களில் வைக்கப்பட்டது. வரவேற்பு செலவினமாக ரூ-12000/- ஆகிய செலவினத்தை பொதுநிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் பார்வைக்கு பொருள் வைக்கப்படுகிறது-

அ.கு. மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.823/2017/எச்1

**தீர்மான எண். 232,** அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.18** இந்நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் தினசரி சேகரமாகும் குப்பைகளை இலகுரக வாகனத்தின் மூலம் நூண்ணுர மையங்களுக்கு கொண்டு செல்ல மூன்று வாகன ஒட்டுநர்கள் குறைவாக உள்ளதினால் ஆண்கள் சுய உதவிகுழு மூலம் மூன்று ஒட்டுநர்களை பணியில் ஈடுபடுத்தி வருவதில் 31.12.2021 ஆம் நாளுடன் முடிவடைகிறது. எனவே, இப்பணிகள் பாதிக்காத வகையில் இதே ஆண்கள் சுய உதவிக் குழு பணியாளர்களை கொண்டு மேலும் 01.01.2022 முதல் 31.03.2022 வரை 2019-2020ம் வருடத்திய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நிர்ணயம் செய்யப்பட்ட ஒட்டுநர் தினக்கூலி ரூ.393/- ஆக மூன்று ஒட்டுநர்களுக்கு மூன்று மாதங்களுக்கு வழங்க தோராயச் செலவினத் தொகை ரூ.1.10 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு: 1) மன்றம் அனுமதி வழங்கலாம்

2) திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் இலகுரக வாகனங்களை இயக்க மூன்று ஒட்டுநர்களை சுய உதவிக்குழு பணியாளர்களை கொண்டு ஈடுபட்டுவருவதில், மேலும் மூன்று மாதங்களுக்கு நீடிக்க மன்றப்பொருள் எதிர்நோக்கி தனி அலுவலர் (ம) ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் அளித்தமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்

3) ஒட்டுநர் மாத ஊதிய செலவினத் தொகையினை வருவாய்நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.618/2017/எச்1

**தீர்மான எண். 233,** அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.19** இந்நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் பயன்பாட்டில் உள்ள TN73AC 3449 என்ற டாடா ஏஸ் வாகனத்தில் மின்கலன் பழுதடைந்துள்ளதால் புதிய மின்கலன் வாங்க 07.12.2021 ஆம நாளில் மன்றபொருளில் தோராயச் செலவினத் தொகை ரூ.10000/-க்கு ஒப்புதல் பெறப்பட்டமைக்கு 10.12.2021ஆம் நாளில் விலைப்புள்ளிகள் கோரப்பட்டமைக்கு 24.12.2021ஆம் நாளில் பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் கீழ்காணும் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கம் வைக்கப்படுகிறது-

| பொருள் | Babu Battery Centre, Arcot. Rate | ஓம் மயூரா, ஆற்காடு விலை | Exide Arcot battery Centre, Arcot, Rate |
|---|---|---|---|
| மின்கலன் | 3000.00 | 3100.00 | 3200.00 |

அ.கு: 1) மன்றம் அனுமதி வழங்கலாம்

2) TN73AC 3449 என்ற டாடா ஏஸ் வாகனத்தில் மின்கலன் பழுதடைந்துள்ளதால் புதிய மின்கலன் வாங்க விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வ.எண்.1) Babu Battery Centre, Arcot. Rate என்பவரின் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று விநியோக உத்தரவு வழங்க மன்றப்பொருள் எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்கள் ஒப்புதல் அளித்தமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

3) புதிய மின்கலன் வாங்க செலவினத் தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.2106/2021/எச்1

**தீர்மான எண். 234,** அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.20** இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் உள்ள காலிமனை எண்.10-னை திரு.பி.நெடுமாறன் என்பவர் குத்தகை எடுத்து நடத்திவருகிறார். இக்கடை கடந்த 2017-18ம் ஆண்டு முதல் 9 ஆண்டுகள் குத்தகை முடிவுற்றது. இக்கடைக்கு கண்காணிப்பு குழுவின் பரிந்துரையின் பேரில் 01.04.2019 முதல் வாடகை மறுநிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. கண்காணிப்பு குழுவால் இக்குத்தகை கடையின் அளவு 248 சதுர அடி என தெரிவிக்கப்பட்டது. (பழைய வாடகை ரூ.1488/- கண்காணிப்பு குழுவால் உயர்த்தப்பட்ட வாடகை ரூ.5952/- ஆகும்)

இதனை தொடர்ந்து இக்குத்தகைதாரரான திரு.பி.நெடுமாறன் என்பவர் என்னுடைய கடையின் அளவு மிகவும் குறைவாக உள்ளது எனவே இடத்தினை ஆய்வுசெய்து வாடகை குறைத்து தறுமாறு மனு அளித்துள்ளார். இதன் படி இந்நகராட்சி ஆணையாளர் நகரமைப்பு அலுவலர், நகரமைப்பு ஆயவர் மற்றும் வருவாய் ஆய்வாளர், இடத்தில் நேரில் ஆய்வுசெய்யப்பட்டதில், மேற்படி குத்தகை கடையானது நகராட்சி இடம் மற்றும் மசூதியிடம் இரண்டும் கலந்து வருவதால் இவ்விடம் குறித்து நகராட்சி நகரளவர் குறிப்பு கோரி கோப்பு அனுப்பப்பட்டது குறிப்பில் இக்கடை சதுர அடி 3 X 10 = 30 சதுரஅடி மட்டுமே நகராட்சிக்கு சொந்தமானதாகும் என நகரளவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, இக்கடையினை அளவு 30 சதுர அடி மட்டுமே உள்ளதால், கண்காணிப்பு குழுவால் நிர்ணயம் செய்யப்பட்ட வாடகை ரூ.5952/- னை ரத்துசெய்து பழைய வாடகை ரூ.1488/-ல் இருந்து 15% உயர்வு செய்து ரூ.1711/- வாடகை நிர்ணயம் செய்து 01.04.2019 வாடகை நிர்ணயம் செய்ய மன்ற அனுமதிக்கும், ஒப்புதலுக்கும், வைக்கப்படுகிறது.

அ.கு. மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மான எண். 235,** அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.21** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19 அண்ணாநகர் நகராட்சி நடுநிலைப்பள்ளியில் உள்ள கட்டிடங்களில் R.C.C. roof-ல் உள்ள பூச்சு வேலை உடைந்து பழுதடைந்த நிலையில் உள்ளதால் அப்பள்ளியில் பயிலும் மாணவர்களின் நலனை சருத்தில் கொண்டு மேற்கண்ட பள்ளியில் உள்ள 5 கட்டிடங்களில் பழுதடைந்துள்ள மேற்கூறையை சரிசெய்ய Weathering coute கான்கீரிட் மற்றும் Weather proof Tiles, வர்ணம் பூசுதல் இதர பழுது பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கான தோராய மதிப்பீடு செலவினத் தொகை ரூ.9.40 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ-கு:- 1) மன்றம் அனுமதிக்கலாம்

2) மேற்கண்ட செலவினத்தை கல்விநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழுஙகலாம்.

3) இப்பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் அனுமதி பெற்று மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் ஒப்புதல் வழுங்கலாம்.

**தீர்மான எண். 236, அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.22**) இந்நகராட்சியில் 2021-2022ம் ஆண்டு O & M Gap Filling fund 2021-22ன் கீழ் ரூ2.80 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.27, கோணன் தெருவில் உள்ள சமுதாய கழிப்பிடம் பழுது பராமரிப்பு பணிக்கு 17.12.2021-ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதின்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் கீழ்கண்ட ஒப்பீடு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது-

| வ.எண் | ஒப்பந்த்தாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1 | M/s K.ராஜாராம் & Co | 0.30% மதிப்பீட்டினை விட குறைவு |
| 2 | A.M. அரி | 3.03 % மதிப்பீட்டினை விட அதிகம் |

அ.கு:- 1) மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. M/s K.ராஜாராம் & Co ஒப்பந்த்தாரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.30% சதவீதம் குறைவாக உள்ளதை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட பணிக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண். 237, அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.23)** இந்நகராட்சியில் 2021-2022ம் ஆண்டு O & M Gap Filling fund 2021-22ன் கீழ் ரூ.4.50 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.30, ஏரிக்கீழ் தெருவில் உள்ள சமுதாய கழிப்பிடம் பழுது பராமரிப்பு பணிக்கு 17.12.2021-ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதின்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் கீழ்கண்ட ஒப்பீடு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது-

| வ.எண் | ஒப்பந்த்தாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1 | M/s K.ராஜாராம் & Co | 0.29% மதிப்பீட்டினை விட குறைவு |
| 2 | A.M. அரி | 2.65 % மதிப்பீட்டினை விட அதிகம் |

அ.கு:- 1) மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. M/s K.ராஜாராம் & Co ஒப்பந்த்தாரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.29% சதவீதம் குறைவாக உள்ளதை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட பணிக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண். 238, அனுமதிக்கப்பட்டது**

**ஆற்காடு**
**நாள்: 31.12.2021**

**தனி அலுவலர்,**
**ஆற்காடு நகராட்சி**